**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**H.M.O.P. No. 212/2023**

பெயர் : பிரியதர்ஷினி (PW1) (Cross continuation)

த/க/பெ. :

தேதி : 24.03.2025.

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் B.Sc., and M.Sc., Bio Tech and M.C.A. படித்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு உண்மையை மறைத்து பதில் ட்அறித்தால் பொய் சாட்சி சொன்ன குற்றத்திற்காக நடிவடிக்கை மேற்கொள்ளபட்டு தண்டனை வழுங்கப்படும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். திருமணத்தின் போது நான் B.Sc., Bio Tech படித்துக்கொண்ருந்தேன் என்றால் சரிதான். திருமணம் ஆகி 6 மாதம் என் கணவர் விட்டில் இருந்தேன் என்றால் சரியல்ல. 6 மாதம் கழித்து தான் என் கணவர்வீட்டிற்கு சென்றேன். அங்கு ஒரு மாதம் தான் இருந்தேன் அதன் பின்னர் சண்டை வந்ததால் திரும்ப வந்துவிட்டேன்.திருமணம் ஆகீ 6 மாதம் கழித்து சாந்தி முகூர்த்தம் நடந்தது. என் கணவர் வீட்டில் சுமார் 6 மாதத்திற்கு குறைவாக தான் இருந்தேன். அதன் பின்னன்ா என் பாட்டியுடன் சீர்காழி வி.என்.எஸ். நகரில் தங்கியுங்ளளேன் என்றால்சரிதான். அங்கு மாத வாடகை 2500 என்றால் அது குறித்து தெரியவில்லை. என் பாட்டி வீடு என்பதால் தங்கியுள்ளேன். அந்த வீட்டில் நான், எனது அம்மா, பாட்டி, வீட்டுக்காரர் ஆகியோர் இருந்தோம். அதன் பின்னர் சீர்காழி தோப்பு தெருவில் 30,000/-க்கு போக்கியத்திற்கு குடியிருந்தோம் என்றால் சரிதான். என் தாயாரின் கட்டாயத்ததால் தான்வீடு மாறினோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டோடு மாப்பிள்ளையாக இருப்பதாக அவரது உறவினர்கள் பிரச்சனை செய்ததால் நாங்கள் வீடு மாறினோம். அதன் பின்னர் புழுகாபேட்டை தெருவில் ஒரு வீட்டில் போக்கியத்திற்கு தங்கிருந்தோம் என்றால் வாடகைக்கு தங்கியிருந்தோம். மாத வாடகை 4500. அதன் பிறகு என் கணவர் வீட்டிற்குசென்று நான் தங்கியருந்தேன் என்றால் என் மாமனார் இறந்துவிட்டதால் பெரியோர்கள் சொல்லியபடி கொஞ்ச நாட்கள் அங்கிருந்தேன். சுமார் ஒரு ஆண்டு இருந்திருப்பேன். M.Sc., மயிலாடுதுறையில் படித்தேன். நான் படித்ததற்கு என் கணவர் தான் பண உதவி செய்தார் என்றால் சரியல்ல. அவருடன் இருந்து நான்

படித்த அனைத்திற்கும் அவர் தான் பண உதவி செய்தார் என்றால் சரியல்ல. அவர் படிப்பதற்கு என்னை அனுமதிக்காததால் வெளியே மாணவிகள் 4 பேர் தனியாக வீடு எடுத்து தங்கி படித்தேன். நான் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னர் எனக்கு வலிப்பு நோய் ஏற்பட்டது என்றால்ச ரியல்ல. அவேர் அடித்ததால் தான் ஏற்பட்டது. வலிப்பு நோயினால் கை, கால் செயலிழந்து போகும் என்றால் சரிதான். வலிப்பு நோய் ஏற்படும் போது சுமாா 3 லிட்டர் தண்ணீர் நான் குடிப்பேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் திருவெண்காடு ராதகிருஷ்ணன் மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை எடுத்தார் என்றால் சரிதான். அதன் பிறகு சீர்காழி, மயிலாடுதுறை மருத்துவமனையில் காண்பிக்குமாறு அறிவுறுத்தினர் என்றால் சரிதான். சீர்காழியில் பெர்னாட்ஷா மருத்துவரிடம் காண்பித்தேன் என்றால் சரிதான். சிதம்பரம் நரம்பியல் மருத்துவரிடம் போய் பார்த்தோம் என்றால் சரிதான். மயிலாடுதுறை அருண் பிரியா மருத்துவமனையில் என்னை உள்நோயாளியாக வைத்து சிகிச்சை செய்தார்என்றால் சரிதான். அதன்பின்னர் கும்பகோணம் சுபம் மருத்துவமனையில் அனுமதித்து 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை அளித்தார் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டில் தான் சிகிச்சை அளித்தார்கள். மருத்துவ சிகிச்சை பலன் அளிக்கவில்லை என்பதால் தென்னாம்பட்டினம் கிருத்துவ திருசபையில் ஒரு மாதம் வைத்து சிகிச்சை அளித்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் திருநகரி திருசபையில் 2 வாரம்சிகிசை அளித்தார்கள் என்றால் சரிதான். நிம்மேலியில் மசூதியில் 2 வாரம் சிகிச்சை அளித்தார்கள் என்றால் சரிதான். வாணதி அம்மன் கோவிலில் ஒரு மாதம் தங்கி சிகிச்சை அளித்தார்கள் என்றால் சரிதான். சிகிச்சைக்கு சென்ற அனைத்து நாட்களிலும் என் கணவர் தான் என்னுடன் இருந்து அனைத்து செலவுகளையும் செய்து கவனித்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அவர் பகலில் வேலைக்கு சென்று பணம் சம்பாதித்து இரவில் என்னுடன் தங்கி என்னை கவனித்துக் கொள்வார் என்றால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் என் கணவர் என்னை குழந்தையை போல் கவனித்துக்கொள்வார் என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் திருமணத்தின் போது நடந்த சடங்கின் போது நாங்கள் எடுத்துக் கொண்டது என்றால் சரிதான். **அது எ.ம..சா.ஆ. 1 ஆக குறியிடுசெய்யப்படுகிற**து. என்னிடம்

காண்பிக்கபடும் Resume ல் உள்ளது என் விபரம் மற்றும் புகைடப்படம் தான் அதில் என் கணவரின் புகைபடம் எவ்வாறு வந்தது என்பது எனக்குதெரியாது. அந்த ஆவணம் **எ.ம..சா.ஆ. 2 ஆக குறியிடுசெய்யப்படுகிற**து. அரியலூர் கல்லுரியில் என்னுடைய பிராஜட்டுக்கு பரிசு கிடைத்தது அது **எ.ம..சா.ஆ. 3 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** எனக்கு பரிசு வழங்கப்பட்டதற்கான புகைடப்படம் என்றால் சரிதான். **அது எ.ம..சா.ஆ. 4 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** நான் முதல் பரிசு பெற்றதற்கான ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். **அது அது எ.ம..சா.ஆ. 5 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பூம்புகார் கல்லூரியில் 100 சதவீது வருகை பதிவேடு வழங்கப்பட்ட பரிசுக்கான ஆவணம்எ ன்றால்சரிதான். **அது அது எ.ம..சா.ஆ. 6 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அறிவியல் தினத்திற்கு நான் பெற்ற ஆவணம். **அது அது அது எ.ம..சா.ஆ. 7 ஆக குறியிடுசெய்யப்படுகிறது.** International conferrence- 2 தினங்கள் நான் கலந்துக்கொண்டேன் என்றால் சரிதான். விருது பெற்ற வுபடன் என் கணவரை கட்டி அனைத்து நான் படித்ததற்கும் விருதுகளுக்கும் காரணம் அவர் தான் என்று கூறி அழுதேன் என்றால் சரியல்ல. கல்லூாரி பேராசிரியர்கள் மற்றும் நண்பர்கள் இப்படி ஒரு கணவர் கிடைப்பது வரம் என்று சொன்னார்கள் என்று நான் என் கணவரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு குடி, புகைப்பழக்கம் வேறு எந்த கெட்ட பழக்கமும் இல்லைஎன்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு வரை என் கணவர் சிங்கபூரில் வேலை செய்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது பற்றி என்னிடம் சொல்லவில்லை.